O.S. No: 173/2020

பெயர் :வெங்கட்ராகவன்

**வா.சா.1**

03-07-2025

**குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கை கும்பகோணம், பெரிய கடை தெரு, சர்வே நம்பர் 1538/1, 1538/2 ஆகியவற்றிருக்கு தாக்கல் செய்திருக்கிறேன் . சதுரடி கணக்கில் சொல்ல தெரியவில்லை. இந்த சொத்திற்கு மூல பத்திரம் என் பாட்டி ரெங்கநாயகிம்மாள் பெயரில் ஏற்பட்டது. ரெங்கநாயகிம்மாள் பெயரில் எந்த ஆண்டு ஏற்பட்டது என்று தெரியாது. 1928 இல் ஏற்பட்டது. குடும்ப ஏற்பாடு. யார் யாருக்கிடையே ஏற்பட்டது என்று தெரியாது. ரெங்கநாயகிக்கும் அவருடைய கணவருக்கும் இடையே ஏற்பட்ட பத்திரமா என்றால் இருக்கலாம் . அந்த பத்திரத்தில் தாவா சொத்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2 வாடகை பத்திரத்தின் அடிப்படையில் இந்த வழக்கை நான் தாக்கல் செய்திருக்கிறேன். அந்த 2 வாடகை பத்திரங்களையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன் . அந்த வாடகை பத்திரத்தில் எவ்வளவு விஸ்தீர்ணம் சொல்லப்பட்டுள்ளது என்று அந்த ஆவணத்தை பார்த்தால் தான் சொல்ல முடியும். என் அப்பாவிற்கு தாவா சொத்து அவருடைய அம்மா சொத்தாகும். வாடகை பத்திரம் இல்லாமல் பாட்டிக்கு சொந்தமான சொத்து என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ரெங்கநாயகியின் கணவர் ராகவாச்சாரி. ரெங்கநாயகிம்மாளுக்கும் ராகவாச்சாரிக்கும் இறப்பு சான்று வாரிசு சான்று பெற்று தாக்கல் செய்யவில்லை . ரெங்கநாயகிம்மாளுக்கு பிறந்தவர்கள் 4 ஆண்கள் ஸ்ரீனிவாசன், சுந்தரராஜன், சம்பத், அனந்தநாராயணன், பெண் சரோஜா. இவர்கள் தான் வாரிசு என்பதை காட்ட ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை . நாகவாச்சாரியாருக்கும் ரெங்கநாயகிம்மாளுக்கும் இவர்களை சேர்த்து மொத்தம் 8 வாரிசுகள் என்றால் தெரியாது. 1928 க்கு முன் பிறந்தவர்கள் சாரங்கராஜா , பந்தமா ஸ்ரீ, சீனிவாசன், விஜயலெட்சமி என்றால் சீனிவாசனை மட்டும் தான் தெரியும் . அந்த சீனிவாசன் என் தந்தை. 1928 க்கு பின்னர் தான் பிறந்தவர்கள் தான் சுந்தர்ராஜன் , சநம்பத், சரோஜா, அனந்தநாராயணன். பந்தமாசினி என்று எனக்கு ஒரு அத்தை இருக்கும் விவரம் தெரியாது. என் பெரியப்பா சாராங்கராஜா, ஜானகி ஆகியோரை தெரியாது.

வழக்கில் நான் வம்சாவளி பட்டியல் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வம்சாவளி பட்டியல் தவறானது என்றால் சரியல்ல. பதமாசினியுடைய கணவர் ரெங்கநாதன் என்றாலும் , அவருடைய வாரிசுகள் ரவிசந்திரன் , ரமேஷ், லட்சுமி பிரபா , கோமலவள்ளி, ஜெயந்தி ஆகிய 5 நபர்கள் உயிருடன் இன்று வரை இருக்கிறார்கள் என்றால் தெரியாது . அவர்களும் இந்த சொத்தில் ஒரு பாகம் அடையகூடியவர்கள் அவர்களை நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்திரப்பதால் வழக்கு சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல . என்னுடைய தந்தை 21/02/2007 இல் இறந்தார். என்னுடைய தந்தையின் பிறந்த தேதி தெரியாது . என்னுடைய தந்தை 1928 ற்கு முன்பு பிறந்தார் என்றால் என்னால் மறுக்க முடியுமா என்றால் மறுக்க முடியாது. என்னுடைய தந்தை வழி பாட்டி ரெங்கநாயகி , தாத்தா ராகவாச்சாரியார் இடையே 1928 இல் ஏற்பட்ட பத்திரப்படி 1928 க்கு பின்னர் பிறந்தவர்களுக்கு மட்டும் தான் சொத்தில் உரிமையுள்ளது என்றால் சரியல்ல . 1928 இல் ஒரு பத்திரம் ஏற்பட்டதாக 2 பிரதிவாதி எதிர் வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்களை நான் படித்து பார்த்தேன் . 1928 இல் பத்திரத்தின்படி பட்டா மாறுதல் உத்தரவு ஏற்பட்டுள்ளது என்றால் தெரியாது . வா.சா.ஆ. 1 ஆவணம் எதற்காக நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் என் பாட்டி எழுதி கொடுத்த வாடகை பத்திரத்தை நான் தாக்கல் செய்திருக்கிறேன் . இந்த வாடகை பத்திரம் ரெங்கநாயகிம்மாளுக்கும், ராமகிருஷ்ணன் 3 ஆம் பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்டது. இந்த வாடகை பத்திரம் எழுதுவதற்கு எதனடிப்படையில் ரெங்கநாயகிம்மாளுக்கு உரிமை ஏற்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.